# கிருபையை போக்கடித்தவர்கள் - பாகம் 4 (யூதாஸ்காரியோத்து)



நாம் இதுவரை பார்த்த மூன்று பாகங்களில் லோத்துவின் வாழ்க்கையிலும், இஸ்ரவேலின் முதலாவது ராஜாவாக தேவனால் அபிஷேகிக்கப்பட்ட சவுலின் வாழ்க்கையிலும், ஆண்டவர் எத்தனையோ தருணங்களை கிருபையாய் கொடுத்திருந்தும், அதை சரியாக பயன்படுத்தாமல் தங்களுக்கு கொடுக்கப்பட்ட கிருபையை போக்கடித்தவர்களாய் பரிதாபமாக தங்கள் வாழ்க்கை ஓட்டத்தை முடித்தனர். ஆனால் இவ்விருவரை காட்டிலும், ஆண்டவரால் நேரடியாக அப்போஸ்தல ஊழியத்திற்கு அழைக்கப்பட்டு, ஆண்டவரோடு கிட்டத்தட்ட மூன்றரை வருடங்கள் ஒன்றாக உண்டு, உறங்கி, அவருடைய தெய்வீக கிருபை பொருத்தின வார்த்தைகளைக் கேட்டு, அவருடைய வல்லமையை கூடவே இருந்து அனுபவித்து, ஆண்டவர் நம்பி பணப்பையை ஒப்படைக்கும் அளவிற்கு அதிகமான கிருபையைப் பெற்றிருந்தும், அற்ப காசிற்கு ஆசைப்பட்டு தன் கிருபையை போக்கடித்தவர் யூதாஸ் காரியோத்து ஆகும். **1 யோவான் 1:1** இல், அப். யோவான் கூறுகிற அனுபவத்தின்படி, **“ஆதிமுதல் இருந்ததும், நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினாலே கண்டதும், நாங்கள் நோக்கிப்பார்த்ததும், எங்கள் கைகளினாலே தொட்டதுமாயிருக்கிற ஜீவவார்த்தையைக்குறித்து உங்களுக்கு அறிவிக்கிறோம்.“**, யூதாஸ்காரியோத்துக்கும் ஆண்டவரோடு கூட ஒரு தனிப்பட்ட ஐக்கியம்

இருந்திருக்கும். அவரும் கூட பல வேளைகளில் ஆண்டவரோடு கூட தனியாக பல காரியங்களை உரையாடி இருக்க வேண்டும். **யோவான் 13:29 கூறுகிறது "யூதாஸ் பணப்பையை வைத்துக் கொண்டிருந்தபடியினால், அவன் போய், பண்டிகைக்குத் தேவையானவைகளைக் கொள்ளும்படிக்காவது, தரித்திரருக்கு ஏதாகிலும் கொடுக்கும்படிக்காவது, இயேசு அவனுடனே சொல்லியிருப்பார் என்று சிலர் நினைத்தார்கள்.**", என்ற வார்த்தை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவோடு, யூதாஸ்காரியோத்து கொண்டிருந்த நெருக்கத்திற்கும், நம்பிக்கைக்கும் சான்றாகும்.

ஆனால் இப்படிப்பட்ட மேன்மையான அழைப்பிற்கு தன்னை அர்ப்பணித்து ஆண்டவரோடு சுற்றித்திரிந்து, அவரால் மாம்ச பிரகாரமாகவும் ஒவ்வொரு நாளும் போஷிக்கப்பட்டு, அவரோடு உண்டு உறங்கி வாழ்ந்திருந்தும், யூதாசுடைய வாழ்க்கை பாதை மாறி போனது. ஆண்டவர் செய்த பல அற்புதங்களை அவர் கண்ணார கண்டும், நித்திய ஜீவனுக்கு இட்டுச் செல்லும் ஆண்டவருடைய கிருபையுள்ள வார்த்தைகளை காதார கேட்டும், யூதாசின் மனநிலையோ நொடிப்பொழுதில் மாறிப்போனது. **யோவான் 12: 1-8 வசனங்களில் "பஸ்காபண்டிகை வர ஆறுநாளைக்கு முன்னே இயேசு தாம் மரணத்திலிருந்து எழுப்பின லாசரு இருந்த பெத்தானியாவுக்கு வந்தார். அங்கே அவருக்கு இராவிருந்து பண்ணினார்கள்; மார்த்தாள் பணிவிடை செய்தாள்; லாசருவும் அவருடனேகூடப் பந்தியிருந்தவர்களில் ஒருவனாயிருந்தான். அப்பொழுது மரியாள் விலையேறப்பெற்ற களங்கமில்லாத நளதம் என்னும் தைலத்தில் ஒரு இராத்தல் கொண்டுவந்து, அதை இயேசுவின் பாதங்களில் பூசி, தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தாள்; அந்த வீடு முழுவதும் தைலத்தின் பரிமளத்தினால் நிறைந்தது. அப்பொழுது அவருடைய சீஷரில் ஒருவனும் அவரைக் காட்டிக்கொடுக்கப் போகிறவனுமாகிய சீமோனுடைய குமாரனான யூதாஸ்காரியோத்து: இந்தத் தைலத்தை முந்நூறு பணத்துக்கு விற்று, தரித்திரருக்குக் கொடாமல் போனதென்ன என்றான். அவன் தரித்திரரைக்குறித்துக் கவலைப்பட்டு இப்படிச் சொல்லாமல், அவன் திருடனானபடியினாலும், பணப்பையை வைத்துக்கொண்டு அதிலே போடப்பட்டதைச் சுமக்கிறவனானபடியினாலும் இப்படிச் சொன்னான். அப்பொழுது இயேசு:**

**இவளை விட்டுவிடு, என்னை அடக்கம்பண்ணும் நாளுக்காக இதை வைத்திருந்தாள். தரித்திரர் எப்பொழுதும் உங்களிடத்தில் இருக்கிறார்கள்; நான் எப்பொழுதும் உங்களிடத்தில் இரேன் என்றார்.“** ஆண்டவர் தான் உயிரோடு எழுப்பிய லாசருவின் வீட்டில், தான் சிலுவைக்கு செல்வதற்கு சில நாட்களுக்கு முன்பாக இரா விருந்தில் பந்தியிருந்தார். மரியாள் தன் சகோதரனை மரித்தோரிலிருந்து எழுப்பின ஆண்டவருக்கு நன்றி கடனாக, விலையேறப்பெற்ற நளத தைலத்தை, அவருடைய பாதங்களில் பூசினாள். இங்கு அவள் நளத தைலத்தின் மதிப்பு எவ்வளவு பெரியதாக இருந்தாலும், ஆண்டவர் தங்கள் வாழ்வில் செய்த நன்மைக்கு முன்பாக அது ஒன்றுமில்லை என்பதை உணர்ந்தவளாய், அதை அவருடைய பாதத்தில் பூசி தன் நன்றியை வெளிப்படுத்தினாள்.

ஆனால் இதையெல்லாம் யூதாஸ் நேரில் பார்த்திருந்தும், அவர் கண்களுக்கு தைலத்தின் பணமதிப்பு தான் தெரிந்ததே ஒழிய, ஆண்டவரின் வல்லமை, கிருபை, பெரியதாக தெரியவில்லை. அதற்கான காரணத்தையும் வசனம் **யோவான் 12:6** கூறுகிறது, ஆம் அவர் இருதயத்தில் தரித்திரைக் குறித்து கரிசனை இல்லை. அவர் திருடன் என வசனமே சாட்சி கூறுகிறது. மேலும் **பணப்பை வைத்துக்கொண்டு அதிலே போடப்பட்டதைச் சுமக்கிறவனான படியினாலும்**, என்ற வார்த்தையானது யூதாஸ் ஒருவேளை தைலத்தின் மதிப்பான 300 பணம் ஆண்டவருக்கு காணிக்கையாக, தான் சுமக்கும் பணப்பைக்கு வந்திருந்தால் அதைக் குறித்து சந்தோஷப்பட்டிருப்பார். ஆனால் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பாதத்தில் அது பூசப்பட்டது அவருக்கு சந்தோஷத்தை தரவில்லை. அவர் ஆண்டவரோடு இருந்த மூன்றரை வருடமும் எந்த மனநிலையில் இருந்திருப்பார் என்பதற்கு இந்நிகழ்வு ஒரு சான்றாகும். அவர் மனநிலை மாத்திரமல்ல, அவரே தம்மை காட்டிக் கொடுக்கப் போகிறவர் என்று ஆண்டவருக்கு தெரிந்திருந்தும், தொடர்ந்து அவரை பயன்படுத்தினார். ஆழ்மனதில் பண ஆசையும், அதை குறுக்கு வழியில் பெற நினைக்கும் திருட்டு வழியிலும், அவர் ஏற்கனவே நடந்து சென்ற படியால், ஆண்டவர் தம் கிருபையால் அவருக்கு பல தருணங்களை மூன்றரை ஆண்டுகளில் வழங்கியும், இறுதியில் அவர் தன் பழைய நிலைக்கே சென்றார். அதிலும் கொடூரமானது அந்த பணத்தைப் பெற அவர் ஆண்டவரையே காட்டிக் கொடுக்க நினைத்ததாகும். **மத்தேயு 26:14-16 வசனங்களில் “அப்பொழுது, பன்னிருவரில் ஒருவனாகிய**

**யூதாஸ்காரியோத்து என்பவன் பிரதான ஆசாரியரிடத்திற்குப் போய்: நான் அவரை உங்களுக்குக் காட்டிக்கொடுக்கிறேன், நீங்கள் எனக்கு என்ன கொடுக்கிறீர்கள் என்றான். அவர்கள் அவனுக்கு முப்பது வெள்ளிக்காசைக் கொடுக்க உடன்பட்டார்கள். அதுமுதல் அவன் அவரைக் காட்டிக்கொடுப்பதற்குச் சமயம் பார்த்துக்கொண்டிருந்தான்.“**. மேன்மையான ஒரு ஊழியத்திற்காக ஆண்டவர் தன்னை தெரிந்து கொண்டிருந்தும், ஆண்டவரே அவரோடு கூட இருந்தும், அவருக்கோ அற்ப வெள்ளிக் காசே பெரியதாக இருந்தது.

அதுவே அவரை ஆண்டவருக்கு துரோகியாக மாற்றியது. ஆம் **லூக்கா 6:16 அவரை “துரோகியான யூதாஸ்காரியோத்து“** என்றே அறிமுகப்படுத்துகிறது. இறுதியாக, மேல் வீட்டறையில் **“சாயங்காலமானபோது, பன்னிருவரோடுங்கூட அவர் பந்தியிருந்தார். அவர்கள் போஜனம்பண்ணுகையில், அவர்: உங்களிலொருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். அப்பொழுது, அவர்கள் மிகவும் துக்கமடைந்து, அவரை நோக்கி: ஆண்டவரே, நானோ, நானோ? என்று ஒவ்வொருவராய்க் கேட்கத்தொடங்கினார்கள். அவர் பிரதியுத்தரமாக: என்னோடேகூடத் தாலத்தில் கையிடுகிறவனே என்னைக் காட்டிக்கொடுப்பான். மனுஷகுமாரன் தம்மைக்குறித்து எழுதியிருக்கிறபடியே போகிறார்; ஆகிலும், எந்த மனுஷனால் மனுஷகுமாரன் காட்டிக்கொடுக்கப்படுகிறாரோ, அந்த மனுஷனுக்கு ஐயோ; அந்த மனுஷன் பிறவாதிருந்தானானால் அவனுக்கு நலமாயிருக்கும் என்றார்.“ (மத்தேயு 26:20-24)**. இங்கு ஆண்டவர் வெளிப்படையாக என்ன நடக்கப் போகிறது என்பதையும், தன்னை காட்டிக் கொடுக்கிற மனுஷனுக்கு ஐயோ என்றும், இப்படிப்பட்ட மனுஷன் பிறவாதிருந்தானானால் அவனுக்கு நலமாய் இருக்கும், என்று எச்சரிக்கையாக கூறிய பிறகும், அடுத்த வசனத்தில் **“அவரைக் காட்டிக்கொடுத்த யூதாசும் அவரை நோக்கி: ரபீ, நானோ? என்றான்; அதற்கு அவர்: நீ சொன்னபடிதான் என்றார்.“ (மத்தேயு 26:25)**, இங்கு யூதாஸ் ரபீ, நானோ? என்று கேட்க துணிந்தது, அவர் எந்த அளவிற்கு தன் மனதை கடினப்படுத்தி பொருளாசைக்கு சாய்ந்து செயல்பட தொடங்கினார் என்பதை வெளிப்படுத்துகிறது.

மேலும் **யோவான் 13:26-28 வசனங்களில், “இயேசு பிரதியுத்தரமாக: நான் இந்தத் துணிக்கையைத் தோய்த்து எவனுக்குக் கொடுப்பேனோ, அவன்தான் என்று சொல்லி, துணிக்கையைத் தோய்த்து, சீமோன் குமாரனாகிய யூதாஸ்காரியோத்துக்குக் கொடுத்தார். அந்தத் துணிக்கையை அவன் வாங்கினபின்பு, சாத்தான் அவனுக்குள் புகுந்தான். அப்பொழுது இயேசு அவனை நோக்கி: நீ செய்கிறதைச் சீக்கிரமாய்ச் செய் என்றார். அவர் இப்படி அவனுடனே சொன்னதின் கருத்தைப் பந்தியிருந்தவர்களில் ஒருவனும் அறியவில்லை.“** ஆம் **வசனம் 27** தெளிவாகக் கூறுகிறது சாத்தான் அவனுக்குள் புகுந்தான் என்று. அவர் இருக்கும் இடம், ஆண்டவரோடு இராபோஜனபந்தியில், ஆனால் அவர் தன் ஆத்துமாவையோ சாத்தானுக்கு அர்பணித்து விட்டார். அதனால் தான் ஆண்டவர் “**நீ செய்கிறதைச் சீக்கிரமாய்ச் செய் என்றார்**“, உண்மையில் ஆண்டவர் சாத்தானைப் பார்த்துதான் உன்னால் முடிந்ததை சீக்கிரமாய் செய் என்றார். காரணம் சாத்தான் செய்ய நினைத்ததை செய்யும் கருவியாய் யூதாஸ் தன் சரீரத்தையும் கூட அர்ப்பணித்து விட்டார். ஆனால் இது ஆண்டவருக்கும், பிசாசிற்கும் தெரிந்ததே தவிர மற்றொருவரும் நடக்கப் போகிறதை சிந்தித்துக் கூட பார்க்கவில்லை.

கெத்செமனே தோட்டத்தில் **மத்தேயு 26:45-50 வசனங்களில் “பின்பு அவர் தம்முடைய சீஷர்களிடத்தில் வந்து: இனி நித்திரைபண்ணி இளைப்பாறுங்கள்; இதோ, மனுஷகுமாரன் பாவிகளுடைய கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுகிற வேளை வந்தது. என்னைக் காட்டிக்கொடுக்கிறவன், இதோ, வந்துவிட்டான், எழுந்திருங்கள், போவோம் என்றார். அவர் இப்படிப் பேசுகையில், பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ் வந்தான்; அவனோடேகூடப் பிரதான ஆசாரியரும் ஜனத்தின் மூப்பரும் அனுப்பின திரளான ஜனங்கள் பட்டயங்களையும் தடிகளையும் பிடித்துக்கொண்டு வந்தார்கள். அவரைக் காட்டிக்கொடுக்கிறவன்: நான் எவனை முத்தஞ்செய்வேனோ அவன்தான், அவனைப் பிடித்துக்கொள்ளுங்கள் என்று அவர்களுக்கு அடையாளம் சொல்லியிருந்தான். உடனே, அவன் இயேசுவினிடத்தில் வந்து: ரபீ, வாழ்க என்று சொல்லி, அவரை முத்தஞ்செய்தான். இயேசு அவனை நோக்கி: சிநேகிதனே, என்னத்திற்காக வந்திருக்கிறாய் என்றார்.**

அப்பொழுது, அவர்கள் கிட்டவந்து, இயேசுவின்மேல் கைபோட்டு, அவரைப் பிடித்தார்கள்.".

மேலும் மாற்கு 14:41-45 வசனங்களில் "அவர் மூன்றாந்தரம் வந்து: இனி நித்திரைபண்ணி இளைப்பாறுங்கள்; போதும், வேளை வந்தது, இதோ, மனுஷகுமாரன் பாவிகளுடைய கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுகிறார். என்னைக் காட்டிக்கொடுக்கிறவன், இதோ, வந்துவிட்டான், எழுந்திருங்கள், போவோம் என்றார். உடனே, அவர் இப்படிப் பேசுகையில், பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ் வந்தான்; அவனோடேகூடப் பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் மூப்பரும் அனுப்பின திரளான ஜனங்கள், பட்டயங்களையும் தடிகளையும் பிடித்துக்கொண்டு வந்தார்கள். அவரைக் காட்டிக்கொடுக்கிறவன்: நான் எவனை முத்தஞ்செய்வேனோ அவன்தான், அவனைப் பிடித்துப் பத்திரமாய்க் கொண்டுபோங்கள் என்று அவர்களுக்குக் குறிப்புச் சொல்லியிருந்தான். அவன் வந்தவுடனே, அவரண்டையில் சேர்ந்து: ரபீ, ரபீ, என்று சொல்லி, அவரை முத்தஞ்செய்தான்.". மேலும் லூக்கா 22:47,48 இல் "அவர் அப்படிப் பேசுகையில் ஜனங்கள் கூட்டமாய் வந்தார்கள். அவர்களுக்கு முன்னே பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ் என்பவனும் வந்து, இயேசுவை முத்தஞ்செய்யும்படி அவரிடத்தில் சேர்ந்தான். இயேசு அவனை நோக்கி: யூதாசே, முத்தத்தினாலேயா மனுஷகுமாரனைக் காட்டிக்கொடுக்கிறாய் என்றார்.".

இங்கு யூதாஸ், மாற்கு 14:44 இல் "அவரைக் காட்டிக்கொடுக்கிறவன்: நான் எவனை முத்தஞ்செய்வேனோ அவன்தான், அவனைப் பிடித்துப் பத்திரமாய்க் கொண்டுபோங்கள் என்று அவர்களுக்குக் குறிப்புச் சொல்லியிருந்தான்." என்று கூறப்பட்டுள்ளபடி, மிகவும் நேர்த்தியாய் திட்டமிட்டு, சரியான சமயத்தில் ஆண்டவரை காட்டிக் கொடுத்தது மாத்திரமன்றி, அவரை பிடித்து பத்திரமாய் கொண்டு போங்கள் என்று கூறுவதில் இருந்து, இந்த தருணத்தை விட்டால் பிறகு அவரை இவ்வாறு கைது செய்வது கடினம் என்பது போல் நினைத்து அவரை பத்திரமாய் கொண்டு போகச் சொன்னார். ஆனால் ஆண்டவரோ ஆதி முதல் எல்லாவற்றையும் அறிந்திருந்தார், காரணம், யோவான் 2:24,25 வசனங்களில், "அப்படியிருந்தும், இயேசு எல்லாரையும் அறிந்திருந்தபடியால், அவர்களை நம்பி இணங்கவில்லை.

**மனுஷருள்ளத்திலிருப்பதை அவர் அறிந்திருந்தபடியால், மனுஷரைக் குறித்து ஒருவரும் அவருக்குச் சாட்சி கொடுக்கவேண்டியதாயிருக்கவில்லை.“**. ஆம் மனுஷர் உள்ளத்தில் இருப்பதை அவர் அறிகிறவர். அதனால்தான் இறுதி தருணமாக, தன்னை காட்டிக்கொடுக்கும் வேளையிலும், **மத்தேயு 26:50 இல் கூறப்பட்டுள்ளபடி “இயேசு அவனை நோக்கி: சிநேகிதனே, என்னத்திற்காக வந்திருக்கிறாய்“**, என்று யூதாஸை நோக்கி கூறியது, நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய் என்று ஆண்டவர் கேட்பது போன்றதாகும். ஆதியில், ஆதாமே நீ எங்கு இருக்கிறாய் என்று, சாத்தானால் வஞ்சிக்கப்பட்ட ஆதாமை நோக்கி ஆண்டவர் கேட்டது போல் ஆகும்.

மேலும் **லூக்கா 22:48 இல் கூறப்பட்டுள்ளபடி, “இயேசு அவனை நோக்கி: யூதாசே, முத்தத்தினாலேயா மனுஷகுமாரனைக் காட்டிக்கொடுக்கிறாய்“**, என்று கூறுவது, எப்படிப்பட்ட கல்நெஞ்சையும் உடைக்கக்கூடிய வார்த்தையாகும். யூதாஸின் மனமும் உடைய தொடங்கியது. **மத்தேயு 27:3,4 வசனங்களில் “அப்பொழுது, அவரைக் காட்டிக்கொடுத்த யூதாஸ், அவர் மரணாக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டதைக் கண்டு, மனஸ்தாபப்பட்டு, அந்த முப்பது வெள்ளிக்காசைப் பிரதான ஆசாரியரிடத்திற்கும் மூப்பரிடத்திற்கும் திரும்பக் கொண்டுவந்து: குற்றமில்லாத இரத்தத்தை நான் காட்டிக்கொடுத்ததினால் பாவஞ்செய்தேன் என்றான். அதற்கு அவர்கள்: எங்களுக்கென்ன, அது உன்பாடு என்றார்கள்.“**. இங்கு யூதாஸ் மனஸ்தாப பட்டார் என்பது சரியான காரியம் ஆகும். 30 வெள்ளிக்காசை விட்டெறிந்து விட்டு, ஆண்டவரை மறுதலித்த பேதுரு மனம் கசந்து அழுதது போல், தானும் மனம் கசந்து அழுது ஆண்டவரிடம் வந்திருந்தால், ஒருவேளை, அவர் வாழ்க்கை வேறு விதமாக இருந்திருக்ககூடும். ஆனால் அவரோ, குற்றமில்லாத இரத்தத்தை நான் காட்டிக் கொடுத்ததினால் பாவம் செய்தேன் என்ற பாவ அறிக்கையை தவறான இடத்தில், தவறான மனிதர் முன்பு செய்தார்.

ஆனால் அவர்களோ அது உன் பாடு என்று கூறி சென்று விட்டனர். இப்பொழுது தான் செய்த பாவத்திற்கு தானே முழு காரணம் என்பதை உணர்ந்த யூதாஸ், தன் ஆவி, ஆத்துமா மற்றும், சரீரத்தை பிசாசிடம் இருந்து மீட்கக்கூடிய ஆண்டவரிடத்தில் வராமல், **“அப்பொழுது, அவன் அந்த வெள்ளிக்காசைத் தேவாலயத்திலே எறிந்துவிட்டு,**

**புறப்பட்டுப்போய், நான்றுகொண்டு செத்தான்.“ (மத்தேயு 27:5).** இங்கு அவருடைய முடிவு பரிதாபமாய் காணப்படுகிறது. ஆண்டவருக்காக செயல்பட்ட கையும், ஓடிய கால்களும், சாத்தானுக்கு இடம் கொடுத்ததால் அமைதியானது. ஆம், இந்நிகழ்வு ஏற்கனவே முன் குறிக்கப்பட்டிருந்தாலும், அதற்கு தன்னை கீழ்ப்படுத்தி, தவறான பாதையில் சென்று, இறுதியில் பரிதாபமான முடிவை தேடிக்கொண்டது, யூதாஸ் தேவ கிருபையை எவ்வளவாய் போக்கடித்தார் என்பதற்கு ஒரு சான்றாகும்.

**அப்போஸ்தலர் 1:15-26 வசனங்களில் “அந்நாட்களிலே, சீஷர்களில் ஏறக்குறைய நூற்றிருபதுபேர் கூடியிருந்தபோது, அவர்கள் நடுவிலே பேதுரு எழுந்து நின்று: சகோதரரே, இயேசுவைப் பிடித்தவர்களுக்கு வழிகாட்டின யூதாசைக்குறித்துப் பரிசுத்தஆவி தாவீதின் வாக்கினால் முன் சொன்ன வேதவாக்கியம் நிறைவேற வேண்டியதாயிருந்தது. அவன் எங்களில் ஒருவனாக எண்ணப்பட்டு, இந்த ஊழியத்திலே பங்கு பெற்றவனாயிருந்தான். அநீதத்தின் கூலியினால் அவன் ஒரு நிலத்தைச் சம்பாதித்து, தலைகீழாக விழுந்தான்; அவன் வயிறுவெடித்து, குடல்களெல்லாம் சரிந்துபோயிற்று. இது எருசலேமிலுள்ள குடிகள் யாவருக்கும் தெரிந்திருக்கிறது; அதினாலே அந்த நிலம் அவர்களுடைய பாஷையிலே இரத்தநிலம் என்று அர்த்தங்கொள்ளும் அக்கெல்தமா என்னப்பட்டிருக்கிறது. சங்கீத புஸ்தகத்திலே: அவனுடைய வாசஸ்தலம் பாழாகக்கடவது, ஒருவனும் அதில் வாசம்பண்ணாதிருப்பானாக என்றும்; அவனுடைய கண்காணிப்பை வேறொருவன் பெறக்கடவன் என்றும் எழுதியிருக்கிறது. ஆதலால், யோவான் ஞானஸ்நானங்கொடுத்த நாள்முதற்கொண்டு, கர்த்தராகிய இயேசுவானவர் நம்மிடத்திலிருந்து உயர எடுத்துக்கொள்ளப்பட்ட நாள்வரைக்கும், அவர் நம்மிடத்தில் சஞ்சரித்திருந்த காலங்களிலெல்லாம் எங்களுடனேகூட இருந்த மனுஷர்களில் ஒருவன் அவர் உயிரோடெழுந்ததைக்குறித்து, எங்களுடனேகூடச் சாட்சியாக ஏற்படுத்தப்படவேண்டும் என்றான். அப்பொழுது அவர்கள் யுஸ்து என்னும் மறுநாமமுள்ள பர்சபா என்னப்பட்ட யோசேப்பும் மத்தியாவும் ஆகிய இவ்விரண்டுபேரையும் நிறுத்தி: எல்லாருடைய இருதயங்களையும் அறிந்திருக்கிற கர்த்தாவே, யூதாஸ் என்பவன் தனக்குரிய இடத்துக்குப் போகும்படி இழந்துபோன இந்த ஊழியத்திலும் இந்த அப்போஸ்தலப்பட்டத்திலும் பங்கு**

**பெறுவதற்காக, இவ்விரண்டு பேரில் தேவரீர் தெரிந்துகொண்டவனை எங்களுக்குக் காண்பித்தருளும் என்று ஜெபம்பண்ணி; பின்பு, அவர்களைக்குறித்துச் சீட்டுப்போட்டார்கள்; சீட்டு மத்தியாவின்பேருக்கு விழுந்தது; அப்பொழுது அவன் பதினொரு அப்போஸ்தலருடனே சேர்த்துக்கொள்ளப்பட்டான்.**", மேற்கண்ட பேதுருவின் வார்த்தைகள், யூதாஸ் எப்படிப்பட்ட காரியத்திற்காக தெரிந்து கொள்ளப்பட்டார் என்று தெளிவாக விளக்குகிறது. **யூதாஸ் என்பவன் தனக்குரிய இடத்துக்குப் போகும்படி இழந்துபோன இந்த ஊழியத்திலும் இந்த அப்போஸ்தலப்பட்டத்திலும்,** என்ற வார்த்தையானது அவர் எவ்வளவு பெரிய மேன்மையை இழந்து போனார் என்பதை தெளிவாக கூறுகிறது. அநீதத்தின் கூலியினால் அவருக்கு ஏற்பட்ட முடிவும் **வசனம் 1:18** இல் சாட்சியாக கூறப்பட்டுள்ளது. எனவே யூதாஸ்காரியோத்து, தனக்கு கிருபையாக கொடுக்கப்பட்ட ஆண்டவருடைய ஊழியத்தையும், அப்போஸ்தல பட்டத்தையும், இழந்து போனது மிகவும் துக்கமான ஒன்றாகும்.

இது இன்று, ஆண்டவருக்கு ஊழியம் செய்கிறோம் என்று கூறிக்கொண்டு, பிசாசிற்கு ஊழியம் செய்வோருக்கு ஒரு எச்சரிக்கை செய்தியாக காணப்படுகிறது. வெளிப்புற தோற்றத்தில் அவர்கள் ஆண்டவரோடு இருப்பதை போன்று காணப்பட்டாலும், யூதாஸை போல் அவர்கள் ஆவி, ஆத்துமா யாருக்கு வேலை செய்து கொண்டிருக்கிறது என்பது மிக முக்கியமானதாகும். ஒருவேளை இருதயத்தில் அவர்கள் பிசாசுக்கு இடம் கொடுத்திருப்பார்களானால், ஒருநாள் வெளிப்படையாகவே பிசாசின் கிரியைகள், ஆண்டவருக்கு எதிரான செயல்கள், கட்டாயம் அவர்கள் மூலம் வெளிப்படும். அப்பொழுது அவர்கள் முடிவும் யூதாஸை போல் பரிதாபமானதாய் காணப்படும். 3 1/2 வருடம் ஆண்டவரோடு இருந்தும், முடிவு பரிதாபமாய் போனது போல், எத்தனையோ வருடங்கள், எவ்வளவோ ஊழியம் செய்தும், இப்படிப்பட்டவர்களின் முடிவு பரிதாபமாய் போகும். எனவே தேவன் நமக்கு அளிக்கும் கிருபையான வாழ்க்கையை, அருமையான தருணங்களை பயன்படுத்தி, தேவனுக்குள் நம்மை காத்துக் கொண்டு, அவர் தரும் பலன் மேல் நோக்கமாய் இருந்து, நித்திய ஜீவகரை சேர்வோமாக. ஆமென், அல்லேலுயா.